“புதுமை மட்டுமே முக்கியம்”

# වාර්ෂික වාර්තාව
# ஆண்டறிக்கை
# Annual Report

# 2022




## ජාතික නවෝත්පාදන නියෝජ්‍යායතනය
## தேசிய புத்தாக்க முகவராண்மை
## National Innovation Agency

“புதுமை மட்டுமே முக்கியம்”

# ஆண்டறிக்கை - 2022


தேசிய புத்தாக்க முகவராண்மை
3ம் மாடி, செத்சிரிபாய கட்டம் I,
பத்தரமுல்ல
Tel: 011-3661201 /-3661205
Fax: 0112875935
Email: info@nia.gov.lk
Web: www.nia.gov.lk


சமூக வலைத்தளம்:

Twitter: @NationalInnova2

LinkedIn: National Innovation Agency Sri Lanka

Facebook: National Innovation Agency - Sri Lanka

YouTube: National Innovation Agency (NIA) - Sri Lanka

https://www.youtube.com/channel/UCzh8_4WJN3EyN8RbIJSDSlQ

**உள்ளடக்கம்** **பக்க எண்**

தேசிய புத்தக்க முகாவராண்மை
தொலைநோக்கு, பணிக்கூற்று, மற்றும் அறிமுகம் 4
NIA இன் குறிக்கோள்கள் 5
NIA இன் செயல்பாடுகள் 6
தவிசாளரின் செய்தி 8
தலைமை புதுமை அதிகாரியின் விமர்சனம் 9

ஆளுகை கட்டமைப்பு
பேரவையின் சுருக்கமான சுயவிவரம் 13
நிறுவன அமைப்பு 14
பணியாளர்கள் 15

செயல் திட்டம் 2022 இன் படி வெளியீடு/விளைவு அடிப்படையிலான செயல்திறன் மதிப்பாய்வு 16

கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கை 38
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 48
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான தேசிய புத்தாக்க முகவராண்மையின் பதில்கள் 55




**தேசிய புத்தாக்க முகவராண்மை**

தேசிய புத்தாக்க **முகவராண்மை** (NIA) சட்டம். சமூக அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் பாதுகாப்பு சுற்றுச்சூழல் மற்றும் சேவைகள் நாட்டின் பொருளாதாரத்தில் அவற்றின் தாக்கம் ஆகிய துறைகளில் புதிய கண்டுபிடிப்புகள் குறித்த சிறந்த புரிதலை அல்லது ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு 2019 ஆம் ஆண்டின் 22 ஆம் திகதி தொடங்கப்பட்டது.

தேசியபுத்தாக்க நிறுவனம் (NIA) என்பது உயர்கல்வி நிறுவனங்கள் விஞ்ஞான அறிவியல் நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை மற்றும் வணிகமயமாக்கலில் இருந்து ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றுக்கு இடையே உள்ள புதிய கண்டுபிடிப்புகளுக்கு பாலமாக செயல்படும் ஒரு தேசிய பொது அமைப்பாகும். அதாவது, தொழில் துறை கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசுக்கு இடையே உள்ள நெருக்கமான ஒத்துழைப்பின் மூலம் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதே இதன் நோக்கம். முக்கிய உதாரணங்களாக ‘‘புத்தாக்கம்’’என்பது விடயங்களை ஆக்கபூர்வமாக பொருளாதார ரீதியாக மட்டுமின்றி, அறிவியல் துறையிலும் இபொதுத்துறை கண்டுபிடிப்புகள், சமூகபுத்தாக்கம், புதுமையான கண்டுபிடிப்புகள், திறந்த கண்டுபிடிப்புகள் போன்றவற்றுடன் மட்டும் நின்று விடுவதில்லை.

புத்தாக்கச் செயல் உண்மையில் நடைபெறுவதை உறுதி செய்வதற்காக இந்த நிறுவனங்கள் திறனாக செயல்படுத்துவதன் மூலம் NIA அதன் நிர்வாக செயல்பாட்டில் விரைவான பலன்களை அடைய புத்தாக்கங்களை புகுத்த வேண்டும், அதுபோலவே பொதுத்துறை சேவை கண்டுபிடிப்புகளும் முக்கிய அம்சமாக அமைகிறது.

இலங்கை பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளவும், உலக புத்தாக்கமையமாக தன்னை உருவாக்குவதற்காகவும், ஒருங்கிணைத்தல் இவ் வலையமைப்பு மற்றும் பல்வேறு துறைகளில் உள்ள அமைப்புகளுடன் இணைந்து செயல்படவும், தொழில், தொழில்நுட்பம், நிதி அல்லது முதலீடு மற்றும் கல்வி போன்ற பல்வேறு துறைகளில் உள்ள பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து செயல்படவும், அறிவுசார் மேலாண்மையை, குறிப்பாக புத்தாக்கங்களை அடைய, அறிவுசார் மேலாண்மையை பயன்படுத்துவதில் கவனம் செலுத்தவும், போட்டி மிக்க பொருளாதாரத்திற்கான முதன்மை கருவியாக புதிய கண்டுபிடிப்புகளை ப்பயன்படுத்துவதும் முக்கியமாக அமையும்.

ஒரு வழிகாட்டுதல் குழுக்கு இந்த தேசிய புத்தாக்க நிறுவனத்தை நிர்வகிக்கிறது. இது அமைச்சுகளுக்கு இடையேயான கட்டமைப்பைக் கொண்டு, ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் இயங்குகிறது. இது இலங்கையின் புதிய கண்டுபிடிப்பாளர்கள் / தொழில் முனைவோர்களை உள்ளடக்கிய ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களை கொண்டதாகும்.

.


இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

2019 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, தேசிய
புத்தாக்க முகவராண்மைச் சட்டம்

(2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

2019, நவெம்பர் மாதம் 15 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 24.00 தபாற் செலவு : ரூபா 30.00

இச்சட்டத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.




பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் சமூக புத்தாக்கம், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்பு, பாதுகாப்பு, சுற்றுசூழல் கண்டுபிடிப்பு மற்றும் சேவை கண்டுபிடிப்புகள் சம்பந்தமாக பணியாற்றுதல்.

• புதிய கண்டுபிடிப்புகளுக்கான தேசிய கொள்கைகளை உருவாக்குதல்

• தேசிய ஆராய்ச்சியை உறுதி செய்வது பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்தல்

• புத்தாக்க படைப்பாளர்கள் மற்றும் முயற்சிகளை ஒருங்கிணைத்தல்

• புதியகண்டுபிடிப்புகளுக்கு தடையாக உள்ள பொது மற்றும் தனியார் துறைகளைக் கண்டறிதல்.

• உற்சாகமான தேசிய புத்தாக்க சூழலை உருவாக்குதல் தனியார்துறையுடன் இணைந்து செயல்படுதல்.

**நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் கடமைகள்:**

a) பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து நிறுவன நோக்கங்களுக்காக செயல்படுதல்.

b) புத்தாக்க படைப்பாற்றல் மிக்க பொருளாதாரத்திற்கு உதவும் வகையில் தேசிய புத்தாக்க திட்டங்களை தொடங்கவும் நிதியளிக்கவும் அரசாங்கத்துக்கு பரிந்துரை வழங்குதல்.

c) அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை புத்தாக்க மற்றும் தொழில் முனைவுயுக்தியின் அடிப்படையில் தேசிய புத்தாக்க சூழலை உருவாக்கி நிலை

நிறுத்துதல்.

d) ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் மூலம் உயர் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு உதவுவதன் மூலம் தேசிய புத்தாக்கம் மற்றும் தொழில் முனைவு அணுகு முறைக்கு ஆதரவு அளித்தல்.

e) முதலீடு கொள்கைகள் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில் முனைவுக்கான உத்திகள் ஆகியவற்றின் செயல்திறனை கண்காணித்து மதிப்பீடு செய்தல்.

f) புத்தாக்க கண்டுபிடிப்பு நடவடிக்கைகளை வணிகமயமாக்குவதை ஊக்குவிப்பதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், துறைகள் மற்றும் இலங்கையின் தர புத்தாக்க அமைப்புகளுடன் இணைந்து சர்வதேச நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

g) அமைச்சரவை ஒப்புதல் அளித்த இலங்கை புத்தாக்க மற்றும் தொழில் முனைவுத்திட்டம் ஆகியவற்றுக்கு உட்பட்ட நிலையான நீடித்த பொருளாதார நிலையை உறுதி செய்யும் வகையில் உலகளாவிய புத்தாக்க கண்டுபிடிப்புக் குறியீடுகளின் தரவரிசைப் பட்டியலில் இலங்கை முன்னேற வேண்டும்.

h) பன்னாட்டுத் தொடர்பு மற்றும் இருப்பு, சூழலைக் கருத்திற்கொண்டு, இலங்கையின் வருடாந்த புத்தாக்க படைப்பு மற்றும் தொழில் முனைவு அறிக்கைகளை பெற்று மதிப்பீடு செய்து வெளியிடுதல் புத்தாக்க கண்டுபிடிப்பு நடவடிக்கைகளை வணிகமயமாக்குவதை ஊக்குவிப்பதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சுககுகள், துறைகள் மற்றும் இலங்கையின் தரபுதுமை அமைப்புகளுடன் இணைந்து சர்வதேச நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

i) நிறுவனத்திற்கு சொந்தமாக அசையும் அல்லது அசையாச் சொத்துகளை வாங்குவதற்கு .நிறுவனத்திற்கு உள்ள அசையும் அல்லது அசையாச் சொத்துகளை குத்தகைக்கு எடுப்பதோ, அடமானம்வைத்தோ, அல்லது விற்பனை செய்தோ அல்லது ஏலம் விடுவதா லோநிறுவன நோக்கத்தை ஊக்குவித்து நடை முறைப்படுத்தலாம்.

j) நிறுவனத்தில சட்டம் இயற்றப் பட்டிருந்தால், அதற்கு அமைவாக எந்தவொரு அரச வங்கியில் அல்லது தனியார் வங்கிகளில் தற்போதைய சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்குகளைத் திறக்க அல்லது பராமரிக்க மற்றும் அத்தகைய கணக்குகளை மூடுவதற்கும் முடியும்.

k) சம்பந்தப்பட்ட ஏதேனும் ஒரு சட்டத்திற்கு உட்பட்டு நன்கொடைகள், மானியங்கள், கடன்கள், அன்பளிப்புக்கள், மற்றும் அசையும், அசையாச் சொத்துக்களும் நிறுவன பயன்பாட்டிற்காக இலங்கை அல்லது வெளிநாடுகளில் உள்ள கொடை நிறுவன நிதி பெறுவதற்கு இந் நிதி அமைச்சின் எழுத்து பூர்வமான ஒப்புதல் பெறவேண்டும்.

l) நிறுவனத்தின் எந்த வங்கிக் கணக்கிலோ அல்லது கணக்குகளில் இருந்து உடனடியாகத் தேவைப்படாத நிதி, நிறுவனத்தின் கணக்கில் வைப்பு செய்யப்படும்.

m) நிறுவனத்தின் நிர்வாகம் தொடர்பான விடயங்களில் சரியான விதிமுறைகளை உருவாக்குதல்.

n) சம்பந்தப்பட்ட நிதி ஒழுங்கு முறைகள், ஆராய்ச்சி தரவு ஒருங்கிணைத்தல் அல்லது நிறுவனத்தின் கடமைகள் மற்றும் செயற்பாடுகளைச் சுமூகமாகவும், சிறப்பாகவும் நிறைவேற்றத் தேவைப்படும் பிற செயல்பாடுகளுக்கு உரிய முறையில் பணம் செலுத்துவதற்கான மூலங்கள். இந்த சட்டத்தின் நோக்கத்துக்காக எந்தவொரு நபராலும் சேகரிக்கப்பட்ட எந்தவொரு பொருள் அல்லது தரவுகளும் இந்த நிறுவனத்திற்கு சொந்தமானதாக இருக்கும்.

o) அமைச்சரவை ஒப்புதல் அளித்தவுடன், சம்பந்தப்பட்ட உள்ளூர் அல்லது வெளிநாட்டு

நபர்கள் அல்லது நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்களில் கையெழுத்திடலாம்.

p) நிறுவனத்தின் நோக்கங்களை அடைவதற்காக தனியார் துறையினருடன் கூட்டு நிறுவனங்களை ஒருங்கிணைத்தல் இலகுபடுத்தல் மற்றும் உதவுதல் தொடர்பாக அமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெறப்படல் வேண்டும்.

q) நிறுவனத்தின் நோக்கங்களை அடைவதற்காக பொதுவாக எத்தகைய செயல்களையும் சாதனைகளையும் செய்யமுடியும்.

## தவிசாளரின் செய்தி



இலங்கையின் தேசிய புத்தாக்க முகவராண்மை (NIA) 2022 ஆண்டறிக்கைக்கான எனது செய்தியை வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த ஆண்டின் பிரதிபலிப்பை நோக்குகையில், இலங்கையின் புதிய கண்டுபிடிப்புகளை வளர்த்தெடுப்பதிலும் / நேர்மயமான மாற்றத்தை ஏற்படுத்துவதிலும் NIA குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டில் புதிதாக கைத்தொழில் தொடங்குவோர் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான ஆதரவுத் தளத்தை உருவாக்குவதற்கு NIA பங்களித்துள்ளது. இந்த தொழில் முனைவு முயற்சிகள் பொருளாதார வளர்ச்சியின் இயந்திரங்களாக இருக்கின்றன என்ற நமது உறுதியான நம்பிக்கை காரணமாக, ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு வழிகாட்டுதல் வழங்க பல்வேறு திட்டங்களை நாங்கள் ஆரம்பித்துள்ளோம். இலங்கையிலுள்ள தொழில் முனைவோர்கள் இதுவரை பயன்படுத்தாத திறன்களை பிரதிபலிக்கும் வகையில், தொடக்க நிலை நிறுவனங்களின் வெற்றிக் கதைகளை இங்கே முன்வைத்துள்ளோம். .

புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பது மற்றும் இலங்கையை வளமான எதிர்காலத்தை நோக்கி வழிநடத்துவது **NIA** என்பதில் உறுதியாக உள்ளது. நாம் எதிர்கொள்ளும் சவால்கள் சிக்கலானவை என்பதை நாம் அங்கீகரிக்கிறோம், இருப்பினும் புதிய கண்டுபிடிப்புகளுக்கான பாதை தடைகள் இல்லாமல் அமையும் என்பதில் திடமாய் உள்ளோம். இருப்பினும், ஒத்துழைப்பை வளர்ப்பதன் மூலமும், பன்முகத்தன்மையை ஏற்றுக் கொள்வதன் மூலமும், சிந்தனை ஆற்றலில் முதலீடு செய்வதன் மூலமும், எந்த இடையூறையும் முறியடித்து, நமது நாட்டின் முழுத்திறனையும் நம்மால் அடைய முடியும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

இலங்கையில் புத்தாக்கத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதில் பங்களிப்பு செய்யும் **NIA** இன் அர்ப்பணிப்புமிக்க குழுவினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, நமது மதிப்புமிக்க பங்குதாரர்களுக்கும், பங்காளர்களுக்கும், மற்றும் வழிகாட்டிக் குழுவின் உறுப்பினர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றாக இணைந்து தொடர்ந்தேர்ச்சியான அபிவிருத்தி, பொருளாதார விருத்தி மற்றும் அனைவருக்கும் சிறந்த எதிர்காலம் ஆகியவற்றை நோக்கி இலங்கையை முன்னோக்கி கொண்டு செல்லும் புத்தாக்கமான கண்டுபிடிப்புகளுக்கான பிண்ணனிணை நாம் தொடர்ந்து வளர்த்தெடுப்போம்.

நன்றி

**EMSB ஏக்கநாயக்க,**
**ஜனாதிபதியின் செயலாளர்,**
**தலைவர், தேசிய புத்தாக்க முகவராண்மை – இலங்கை**
**ஜூன்** 9, 2023

**பிரதம புத்தாக்க அலுவலரின் செய்தி**



**ஒரு தேசிய புத்தாக்க முகவராண்மை பிறந்தது!**

தேசிய புத்தாக்க முகவராண்மையின் முதல் ஆண்டறிக்கையை நாம் வெளியிடுவது பெருமையாக உள்ளது. மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுடன் 2021, நவம்பர் 29 அன்று நடைபெற்ற நிர்வாகக் குழுக் கூட்டத்திற்குப் பின்னர் இந்த நிறுவனம் ஜனவரி 01, 2022 ல் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிறுவனத்திற்கான பயணம் என்பது, பல்வேறுபட்ட கலந்துரையாடல்கள் மற்றும் அமைச்சரவைக் கூட்டங்கள் ஊடாகவும் இன்றைய நிலையை எட்டியுள்ளது. பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண தலைமையிலான சிரேஷ்ட அமைச்சர்கள்கொண்ட செயலகத்தால் உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வந்த COSTI (விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க கண்டுபிடிப்புக்கான ஒருங்கிணைப்பு செயலகம்) இன் நிலைமாற்ற நிறுவனமயமாக்கல் செயற்பாடாகும். இதன் விளைவாக, இலங்கையில் உள்ள அரச துறை நிறுவனங்களில் ஒன்றாக இப்புதிய நிறுவனம் சேர்க்கப்பட்டுள்ளது.

**NIA** என்பது புதுமைகளை முடிந்தவரை புரிந்துகொள்ளக் கூடியவகையில் கையாள்வதற்கான ஒரு நிறுவனமாகும் - இது ஒரு எளிதான செயற்பாடல்ல, இருப்பினும், இன்று நாட்டிற்கு மிகவும் முக்கியமானதும் மற்றும் பொருத்தமானதுமாகும். நாடு ஒரு பெருந்தொற்று நோயை அனுபவித்து, மிகவும் ஒரு இறுக்கமான கட்டத்திற்குள் அடைக்கப்பட்டது போன்ற பொருளாதார சூழ்நிலையில் நகர்ந்து கொண்டிருக்கும் ஒரு பாரிய சிக்கலான காலப்பகுதியிலேயே NIA தோற்றம் பெற்றுள்ளது. பொருளாதாரம் மற்றும் அதன் குடிமக்கள் வெளியில் நிறைய கடன்பட்டிருக்கிறார்கள், எனினும் மிகக் குறைவாகவே அவர்களுக்கு உதித்தாக உள்ளது. இது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. மறுபுறம், இவ்வாறான காலப்பகுதிகளில் புத்ததாக்கத்திற்கான பொதுவான பதிலாக அவை இருக்கவில்லை அல்லது பொருத்தமற்றதென்பதாகும். NIA ஆனது தேசிய மட்ட சிக்கல்கள் நிறைந்த ஒரு காலப்பகுதியில் தோற்றப்பெற்றதால் ஆரம்பித்த முதல் நாளிலிருந்தே சோதிக்கப்படவுள்ளது. இந்த வருடத்தில் உரு குறிப்பிட்ட காலப்பகுதி நிறுவன கட்டமைப்பை செயல்படுத்துவதற்கும், நிலை நிறுத்துவதற்கும் செலவிடப்பட்டது, இது இன்னும் தொடர்கிறது. எவ்வாறாயினும், இந்த சிக்கல்கள், NIA இன் நம்பிக்கையான “புதுமை மட்டுமே முக்கியம்!“ என்ற இலக்கில் முன்னோக்கிச் செல்வதற்கு அணியினர் புதுமையான செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தடுக்கவில்லை என்பதை பதிவு செய்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். செயற்பாடுகளின் பதிவுகள் இதற்கு சான்றாக அமையும்.

NIA ஒரு எழுந்தமானமாக திடீர் உருவாக்கதின் விளைவல்ல என்பதை மீண்டும் வலியுறுத்த வேண்டியுள்ளது. இது காலத்துடன் வளர்ச்சி பெற்ற ஒரு செயற்பாடாகும். இலங்கையில் 2013 ஆம் ஆண்டு முதல் COSTI - அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்திற்கான ஒருங்கிணைப்பு செயலகம் செயற்பட்டு வந்தது. NIA ஆனது COSTI யின் வெளியேற்றம் மற்றும் அதன் நிறுவனமயமாக்கலைக் குறிக்கின்றது. இந்த நிலைமாற்றம் பொருத்தப்பாடாகவும், மிகவும் தெளிவாகவும் இருந்த போதிலும், இந்த மாற்றம் இலகுவானதாக இருந்ததில்லை. மேலும் தேசத்திற்கான ஒரு இலக்கை நோக்காகக்கொண்ட ஆணையின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு இந்த ஸ்தாபனத்தை உறுதி செய்ததற்காக பல தனிநபர்கள் நிச்சயமாக பாராட்டுதலுக்குத் தகுதியானவர்கள். வரலாற்றைக் காட்டிலும் நிறுவனத்தின் கடப்பாட்டைக் புரிந்துகொள்ளுதல் தற்போதைய காலப்போக்கில் முக்கியமானதாகும். NIA ஆனது தனது கடப்பாடுகளை நிறைவேற்றுவதோடு இது தோல்வியடைவதற்கான ஒரு வாய்ப்பல்ல என்பதை உறுதிப்படுத்தவேண்டும். இதனை உறுதி செய்யும் வகையில், அப்போலோ 13 அறிக்கையை எங்கள் அலுவலக நுழைவாயிலில் நாங்கள் காட்சிப்படுத்தி, அவர்கள் எதிர்கொள்ளவேண்டியுள்ள

சவாலை அவர்களுக்கு நினைவூட்ட வேண்டும்! இங்கு வெற்றி என்பது அநேகருக்கு வினையமான முன்னேற்றம் என அர்த்தப்படுத்துகிறது என்பதை ஒரு சிலர் மாத்திரமே ஆதரிப்பர் என்பதனை எதிர்பார்க்க முடியும்.

NIA என்பது புதுமைகளுக்குப் பொறுப்பான ஒரு நிறுவனமானதோடு, இது போன்ற ஒரு ஆணையுடன் நிறுவப்பட்ட குறிப்பான ஒரு நிறுவனமாகும். இதுவே முதன்முறையாக, ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் கண்டுபிடிப்பு ஆகியவற்றின் பெயரிடலில் ஒரு தவறான புரிதல் இருப்பதைக் கருத்திற் கொண்டு, இந்த தலைப்பு விவாதிக்கப்படுகிறது, இங்கு பின்வருவனபற்றி மிகச் சுருக்கமான விளக்கம் அளிக்கப்படுகின்றது. - ஆராய்ச்சி என்பது அறிவை உருவாக்குவதற்கு பணத்தைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்வதாகும். புதுமை என்பது. அவ்வாறு பெற்றுக்கொண்ட அறிவைக்கொண்டு பணத்தை உருவாக்குதல் என பொருள்படும். ஒரு கண்டுபிடிப்பு என்பதும், ஏதோ ஒரு புதிய விடயத்தை உருவாக்குவதில் உள்ளீடுகள் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிக்கு ஒத்ததாகும் - மீண்டும் இதில் ஒரு செலவு ஏற்படும். அறிவையோ அல்லது கண்டுபிடிப்புகளையோ பணமாக மாற்றும் இந்த செயல் முறையானது நாம் கற்றுக் கொண்டு வெளியேறும் போது கிட்டத்தட்ட இல்லாது போய்விடுவதோடு, மீதமுள்ளவை வழக்கமான அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன, இதனால் முதலீடுகளின் மூலம் சாதகமான விளைவுகள் தேசியப் பொருளாதாரத்திற்கு ஏற்படுவதில்லை. நிச்சயமாக சிலவெளிப் பொருளாதாரங்களுக்கு. மிகவும் குறைந்த செலவில் அதிகளவான விளைவுகள் தோற்றம் பெறுகின்றது. கண்டுபிடிப்பாளர்கள் மத்தியில் மொழிபெயர்ப்பில் உள்ள சிக்கல்கள் குறித்து கடுமையான கரிசனைகள் இருப்பதனை நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம் மற்றும் கேள்விப்படுகிறோம். பல தசாப்தங்களாக எமக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினையை வெளிப்படுத்துவதற்கு மறைந்த முனிதாச குமாரதுங்கவின் கருத்து மிகவும் பொருத்தமானதாகும். – புதியவற்றை உற்பத்தி செய்யாத ஒரு நாடு எழுச்சி பெறாது, புதுமையின்படி நடந்தால் மட்டுமே இந்த “புதிய விடயங்கள்“ உருவாக்கம்பெறும். சமூகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்ட ஆக்கப்பூர்வமான மாற்றங்களே வளர்ச்சிக்கு வழிவகுத்தன என்பதனை எந்தவொரு வளர்ச்சிபெற்ற பொருளாதாரத்தையும் ஆராய்ந்து பார்க்கும் போது விளங்கக்கூடியதாக இருக்கும். நீங்கள் பொருளாதார சிக்கல் தன்மைக்கான ஹாவர்ட் அட்லஸ் வரைபடத்தை (Harvard's Atlas of Economic Complexity) அவதானிக்கும் போது, இலங்கையின் 75 வருட ஏற்றுமதிக் கட்டமைப்பைக் கடந்தும் நாம் என்ன செய்யத் தவறிவிட்டோம் என்பதை நீங்கள் விரைவில் புரிந்துகொள்வீர்கள். நீங்கள் வியட்நாம் போன்ற நாடுகள் மாவுகின்ற விதம் குறித்து புரிந்துகொள்ளும் போது, எங்களின் முடிவெடுக்கும் திறமையின்மை குறித்து நீங்கள் நன்கு புரிந்து கொள்கிறீர்கள்.







Creative enterprises and individuals
Research into Rupees

நிறுவனத்தின் இருப்பு என்பது, தீர்மானங்களில் புதுமையின் மதிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும், எங்கள் பாதை தெளிவாகவும், துல்லியமாகவும், முடுக்கிவிடத் தயாராக இருப்பதாகவும் அர்த்தப்படுத்துவதில்லை. ஒரு இளம் நிறுவனத்தால் கவனிக்கப்பட வேண்டிய குறிப்பிடத்தக்க மனப்பாங்கு சார்ந்த பிரச்சினைகள் இன்னும் உள்ளன. புத்தாக்கம் மாத்திரமே அத்தியாவசியமானது என்ற நிறுவனப் பணிக்கூற்று வாசகத்தை பாவித்ததன் மூலம் இந்த செய்தியை வெளியே கொண்டுசெல்ல தேவை NIA இற்கு கணிசமான அளவு குறைத்துள்ளது. எடுத்தியம்பல் செயற்பாடு எல்லா நேரத்திலும் அதன் கவனத்தை ஈர்க்க முடியாது. புதுமையுடன்

கூடிய சுற்றுச்சூழல் பிண்ணனி மூலமே புத்தாக்கம் சாத்தியமாகும். அனைத்து பங்குதாரர்களையும் அடையாளம் கண்டு, சுற்றுச்சூழல் அமைப்பை உற்சாகப்படுத்துவது உடனடித் தேவைப்பாடாகும். NIA சின்னத்தின் (Logo) ஒரு பகுதி புதுமைக்கான மாதிரியாகும் - மூன்று ஹெலிக்ஸ் மாதிரி (பல்கலைக்கழகம், தொழில்துறை மற்றும் அரசு). புத்தாக்கத்திற்கான சுற்றுச்சூழல் பிண்ணனியின் உற்பத்தித் திறன் தொடர்ந்து கவனிக்கப்பட வேண்டும் மற்றும் புதிய கருவிகள் மற்றும் வழிமுறைகளுடன் அமைப்பு வினையூக்கப்பட வேண்டும். இலங்கையில் கல்வி நிறுவனங்களுக்கு குறைவில்லை. இருப்பினும், புத்தாக்கத்தை நோக்கத்தின் விளைவாகக் கொண்ட பொதுவான நோக்கத்துடன் இணைந்து செயற்படுவது பெரும்பாலும் இல்லாததொன்றாகும்.

Triple Helix Model of Innovation




2019 ம் ஆண்டு 22ம் இலக்க சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள NIA இன் நோக்கங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகள் ஆகியவை அறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ளன. NIA அதன் கடப்பாட்டில் கணிசமாக நிறைவேற்ற வேண்டி இருப்பதை உங்களால் அவதானிக்க முடியும். அத்துடன் அவை மிகவும் அத்தியாவசியமான பணிகள் என நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள்.

NIA புதிய கண்டுபிடிப்புகளை ஐந்து குறிப்பான அலகுகளின் கீழ் கையாளுகின்றது. அவற்றை அந்ததந்த பொறுப்பான துறைசார் நிறுவனங்களுடன் இணைந்து செயற்படவேண்டும். புத்தாக்கம் என்பது ஒரு குழு விளையாட்டைப் போன்ற செயற்பாடாக இருப்பதால், பங்காளித்துவம் என்பது அத்தியாசியமானதாகவும், கண்டுபிடிப்பும் ஆராய்ச்சியும் தனித் தன்மையுடனும் செயற்படமுடியும். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்பு, சேவைக் கண்டுபிடிப்பு, சமூக புத்தாக்கம், சுற்றுச்சூழல் புதுமை, பாதுகாப்பு புதுமை ஆகியவை NIA-வின் ஐந்து தூண்கள். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப புத்தாக்கமானது, அறிவு வளர்ச்சி அடைந்து, ஆதார வளங்களை முக்கியமான முதற்படி என்று கொண்டு வருகிறது. பொருள்களிலிருந்து மதிப்பு கூட்டப்பட்ட போட்டித் தயாரிப்புகளுக்கு – வளங்கள் மற்றும் அறிவை பயன்படுத்துதல். சேவை புத்தாக்கம் உடனடியாக இணைய வழிமயமாக்கலை உள்ளடக்கியது மற்றும் படைப்பு அழிவின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்கிறது. பழங்கால நடைமுறைகள் மற்றும் நடைமுறைகள் நமது சமூகத்தையும், சமூக புதுமைகளையும் முடக்கிவிட்டன. முதலீடுகளுக்கு வருவாய் ஈட்டும் நோக்கத் துடன் அனைத்து புதுமைகளையும் செய்யக்கூடாது. புதியகண்டுபிடிப்புகள், நேரியல் பொருளாதாரங்களை வட்டபொருளாதாரங்களாக மாற்றுதல், இயற்கையை அடிப்படையாகக் கொண்ட தொழில் முனைவு, நீல-பச்சைப் பொருளாதார பாதைகள் மற்றும் உயிரியலறி கற்றல் ஆகியவை இலங்கைப் பல்லுயிர்ப் பெருக்கம் அதிகம் உள்ள இடத்திலிருந்தே கற்க வேண்டும்.

இந்த துறையில் இதுவரை பயன்படுத்தப்படாத திறன்கள்காத்திருக்கிறது. கடைசியாக, ‘‘துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள்’’என்பது ‘‘மனிதர்கள் மற்றும் ஆணைகளுடன்’’அல்ல. சிங்கப்பூரின் ஒட்டுமொத்த பாதுகாப்பு, அதன் கருத்துக்களையே புதுமைப்படைக்கிறது. புதுமைத்தூண்கள் மற்றும் ஒருங்கிணைப்புடன், பெரியவாய்ப்புகளைக் காணமுடியும். இதன் மூலம் கிடைக்கும் செல்வம் உண்மையில் தேசிய செல்வமாக இருக்கும். நமது முதல் ஆண்டில், புதிய கண்டுபிடிப்புகளுக்கான சூழலை உருவாக்குவதற்கும், முக்கியத்துவம் வாய்ந்த நடிகர்களை இணைப்பதற்கும் நாம் நேரத்தை செலவிட்டோம்.

கண்டுபிடிப்பு என்பது பொருளாதார வளர்ச்சி, மற்றும் சிறந்த வேலைகளுக்கான மையஉந்துசக்தியாக இருப்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட தத்துவம். இந்தியா மற்றும் இஸ்ரேல் முதல் கென்யாவரை பலநாடுகளில் இருந்துநாம் பின்பற்றும் நிறுவன ரீதியான உதாரணம் இது குறித்து புதுமையாக்கும் முகாமைகளைக் கொண்டுள்ளது. இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகள் GI (குளோபல் இன்டெக்ஸ்) மதிப்பீட்டை உள் நாட்டு திட்டமிடலுக்கு பயனுள்ள கட்டமைப்பாக மிகவும் தீவிரமாக கருதுகின்றன. சர்வதேச மேம்பாட்டு முகாமைகளைக் புதிய கண்டுபிடிப்பு ஏஜென்சிகளை உருவாக்கி உள்ளன. மற்றொரு அரசாங்கத்துக்கு சொந்தமான நிறுவனத்திற்கான தத்துவம் தெளிவாக உள்ளது, ஆனால் தத்துவம் மட்டுமே மொழிபெயர்ப்பில் விளைவடையாது. முனிடாசா குமரத்துங்காவின் தத்துவம், நமது கொள்கைகளிலும், நடைமுறையிலும் சிறிது காலமாகத் தவறிவிட்டது. ஆனால், ருவாண்டாவில் பால்ககாமே கூறியுள்ள உண்மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் – ‘‘நமதுகடிகாரத்தை நம்மால் திருப்பிவிட முடியாது, ஆனால் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சக்தி நம்மிடம் உள்ளது.’’

**பேராசிசியர் அஜித் டி அல்விஸ்,**

**சிரேஸ்ட பேராசிரியர்- இரசாயனவியல் மற்றும் செயல் முறை பொறியியல்,**
**பட்டதாரிப் படிப்புக்கள்- மொறட்டுவை பல்கலைக்கழகம்,**
**தலைமை புத்தாக்க அலுவலர் (பதில்) - NIA**

**தேசிய புத்தாக்க முகவராண்மை வழிகாட்டல் குழு** (01-01-2022 to 31-12-2022)

தலைவர் - ஜனாதிபதியின் செயலாளர்

திரு. காமினி செனரத் (ஜனவரி – ஜூலை 2022)
திரு. நு.ஆ.ளு.டீ ஏக்கநாயக்க ( ஜூலை 2022 முதல் இன்றுவரை)

உறுப்பினர்கள் :

கலாநிதி. சங்கபால கம்வாறிகே
திரு மஞ்சு குணவர்த்தன
கலாநிதி. விஜயசூரிய
கலாநிதி. ஹர்ச சுபசிங்க
பொறியியலாளர் உதய டம்பகே
பேராசிரியர் ரொஹான் முனசிங்க
திரு. பீ. எல் பத்மகுமார
திரு. ரீ. பீ. எம் அத்தபத்து
திரு. ஈ. ஏ. ரத்னசீலா
திரு. கே. ஆர் பத்மப்பிரியா (ஜனவரி – ஒக்டோபர் 2022)
கலாநிதி நரேஸ் ஹந்தகம
செல்வி சஞ்சீவனி வீரசேகர (ஜனவரி – ஒக்டோபர் 2022)
திருமதி பீ. எம். எஸ் பண்டார
திருமதி கீதாஞ்சலி ஆர் ரணவக
திரு. ஜீ எல் ஞானதேவா
பேராசிரியர் என். எம். எஸ் சிறிமுத்து
செல்வி நதீகா வட்டலியத்த (ஒக்டோபர் – டிசம்பர் 2022)
திரு எச்.சீ. டீ. எல். சில்வா (ஒக்டோபர் - இன்று வரை)

2022 ல் நடைபெற்ற நிருவாக சபை கூட்டங்களின் எண்ணிக்கை: 06

| | கூட்ட எண் | திகதி |
|---|---|---|
| 01 | 01-2022 | 18 மார்ச் 2022 |
| 02 | 02-2022 | 29 ஏப்ரல் 2022 |
| 03 | 03-2022 | 27 மே 2022 |
| 04 | 04-2022 | 21 ஒக்டோபர் 2022 |
| 05 | 05-2022 | 25 நொவம்பர் 2022 |
| 06 | 06-2022 | 21 டிசம்பர் 2022 |

**நிறுவன அமைப்பு**

(முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது)



## 31 டிசம்பர் 2022 இன் உத்தியோகத்தர்கள்

போராசிரியர் அஜித் டி அல்விஸ் - தலைமை புத்தாக்க அதிகாரி (பதில்)

வைத்திய கலாநிதி சச்சீ பணாவல – மேலதிக தலைமை புத்தாக்க அதிகாரி

திருமதி விந்தியா விஜேசிங்க – சிரேஸ்ட புத்தாக்க அதிகாரி (தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் வர்த்தகமயமாக்கல்)

செல்வி நவோடி விக்கிரமசிங்க - சிரேஸ்ட புத்தாக்க உத் அதிகாரி (சேவை மற்றும் சமூகப் புத்தாக்கம்)

திருமதி திடசி தகநாயக்க - சிரேஸ்ட புத்தாக்க அதிகாரி (விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் சூழல் புத்தாக்கம்)

திருமதி பூஜா மலவிசூரிய – பிரதி பணிப்பாளர் (மனிதவளங்கள்)

செல்வி வஜிரா பெரேரா (இவர்களுக்கான பதவிகள் நிர்வாக சேவைகள் திணைக்களத்தின் அறிவுரைக்காக காத்திருக்கின்றது)

திரு ஷனிக்க அபேரத்ன (இவர்களுக்கான பதவிகள் நிர்வாக சேவைகள் திணைக்களத்தின் அறிவுரைக்காக காத்திருக்கின்றது)

திரு சாமிகர டீ சில்வா (இவர்களுக்கான பதவிகள் நிர்வாக சேவைகள் திணைக்களத்தின் அறிவுரைக்காக காத்திருக்கின்றது)

திரு லசித்த குமார (அலுவலக உதவியாளர்)

திருமதி கணேஷா விஜேசிங்க – கணக்காளர் (பதில்), கல்வி அமைச்சு

<u>2022 ஆம் ஆண்டின் NIA நிறுவனத்தின் செயல்திறன் அடைவுகள்</u>

## திறமையான இணைப்பிற்காக எண்முறை (டிஜிட்டல்) தளங்களை உருவாக்குதல்

தேசிய தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான தளத்தை உருவாக்க ICTA உடனான கலந்துரையாடல்.

புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில் நுட்ப சூழலுக்கான எண்முறை (டிஜிட்டல்) தளத்தை உருவாக்குவதில் ICTA வும் ஜேயு வும் இணைந்து பணியாற்றுவதற்காக ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தின.

ICTA நிறுவனமானது எண்முறை (டிஜிட்டல்) இலங்கைக்கான இலக்கை அடைதல் தேசிய அளவிலான தொழில்நுட்ப தளத்தை உருவாக்குதல் தொடர்புவசதிகளை உருவாக்குதல் உதவிகரமான கண்டுபிடிப்புகள் மற்றும் கூட்டு முயற்சிகள் மூலம் இலங்கையில் எண்முறை ( டிஜிட்டல் ) மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும் தேசிய தொழில்நுட்பம் மற்றும் புதிய கண்டுபிடிப்புதளத்தை உருவாக்க முயற்சி மேற்கொள்ளப் படுகிறது.

திறமையான இணைப்பிற்காக எண்முறை (டிஜிட்டல்) தளங்களை உருவாக்குதல்

தேசிய தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான தளத்தை உருவாக்க ICTA உடனான கலந்துரையாடல்.

புதியகண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்ப சூழலுக்கான டிஜிட்டல் தளத்தை உருவாக்குவதில் ICTA ம NIA; இணைந்து பணியாற்றுவதற்காக ஆரம்ப கட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தின.

ICTA நிறுவனமானது டிஜிட்டல் இலங்கைக்கான இலக்கை அடைதல், தேசிய அளவிலான தொழில் நுட்ப தளத்தை உருவாக்குதல், தொடர்புவசதிகளை உருவாக்குதல், உதவிகரமான கண்டுபிடிப்புகள் மற்றும் கூட்டு முயற்சிகள்மூலம், இலங்கையில ̇டிஜிட்டல் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும் தேசிய தொழில் நுட்பம் மற்றும் புதிய கண்டுபிடிப்பு தளத்தை உருவாக்க முயற்சி மேற்கொள்ளப் படுகிறது.

அறிவியல், தொழில்நுட்பம், விண்வெளி ஆகியவற்றை இணைக்கும் வகையிலும், புதியகண்டுபிடிப்புகள் மற்றும் முதலீட்டாளர்களை இணைக்கும் வகையிலும் தேசிய புத்தாக்க முகப்பு (GATEWAY), பிஸ்னஸ் 2 மக்கள் (B2P) தளத்தை NIA ஏற்கனவே உருவாக்கியுள்ளது. தற்போது இந்த இரண்டு தளங்களும் தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுளளது. இலங்கையின் புத்தாக்க கண்டுபிடிப்புக்கள் மற்றும் தொழில்நுட்ப சூழலை டிஜிட்டல ̇முறையில் இணைப்பதில் இரு நிறுவனங்களும் இணைந்து பணியாற்றும் திறமையான இணைப்பிற்காக டிஜிட்டல் தளங்களை உருவாக்குதல்



Labnet.lk

நாடு முழுவதும் 20 க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக் கழகங்களை இணைக்கும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு சாதனங்களை கண்டுபிடிக்க இலங்கை ஆராய்ச்சியாளர்களுக்கு இணைய வழி GATEWAY என்னும் Labnet.LK SLINTEC, COSTI மற்றும் E-class என்பன கூட்டுப்பணியாக உருவாக்கப்பட்டது 16 மார்ச் 2022 அன்று தனது செயல்பாடுகளை அதிகாரப்பூர்வமாக NIA விடம்ஒப்படைத்தது.

SLINTEC NIA மற்றும் E-class தீர்வுகள் ஆகியவற்றுக்கு இடையே, எதிர்காலத்தில் Labnet.lk செயல்பாட்டு வழிகுறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன்படி, NIA, சம்பந்தப்பட்ட துறையினருடன் Labnet இணைந்து பராமரிப்பையும் இயங்குவதையும் உறுதிப்படுத்தும்

## பரிந்துரைக்காக கொள்கை ஆவணங்கள்.




உபகரணங்கள் பகிரும் கொள்கை மாதிரி உருவாக்கம்

பொதுத்துறையில் கல்வி நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களில் உபகரணங்கள் பகிர்தல் தொடர்பாக கொள்கை ஆவணம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரி இலங்கை SLINTEC நிறுவனத்துடன் இணைந்து தேசிய அறிவியல் தொழில்நுட்ப ஆணைகுழுவுக்கு (NASTEC) அனுப்பிவைக்கப்பட்டது.

### உலக குறியீடுகளில் இலங்கை நாட்டின் நிலையை மேம்படுத்துதல். இலங்கையின் பொருளாதார மீட்பில் புதிய கண்டுபிடிப்புகளுக்கு முன்னுரிமைஅளித்தல் உலகளாவிய புத்தாக்க குறியீட்டின் தேசிய அறிமுகம் (GII) - இலங்கை

உலகளாவிய புத்தாக்க கண்டுபிடிப்புக் குறியீடு (GII) சமீபத்திய உலகளாவிய புத்தாக்க கண்டுபிடிப்புபோக்குகளை வரிசைப்படுத்தி, உலகில் மிகவும் புதுமையான பொருளாதார முன்னேற்றங்களை வெளிப்படுத்துகிறது. புத்தாக்க கண்டுபிடிப்புகளின் பலம் மற்றும் பலவீனங்களை முன்னிலைப்படுத்தும் அதேநேரத்தில், 132 பொருளாதாரங்களின் கண்டுபிடிப்புகளின் செயல்திறனை தரவரிசைப் படுத்துகிறது. புத்தாக்க கண்டுபிடிப்புகளின் முழுமையான சித்திரமாக கருதப்படும் இந்த குறியீட்டு எண், அரசியல் சூழல், கல்வி, கட்டமைப்பு மற்றும் ஒவ்வொரு பொருளாதாரத்தின் அறிவு உருவாக்கம் உள்ளிட்ட சுமார் 80 குறிகாட்டிகளைக் கொண்டுள்ளது. ஒரே பிராந்தியம் அல்லது வருமானக் குழுவுக்குள் உள்ள

பொருளாதாரங்களுக்கு எதிரான செயல்திறன் மற்றும் அளவீட்டு மேம்பாடுகளைக் கண்காணிக்க GII. உதவுகிறது.
2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 29 ஆம் தேதி உலக அறிவுசார் அமைப்பு 15 வது உலக புதுமைக் கண்டுபிடிப்புக் குறியீட்டில் (GII) 132 உலகப்பொருளாதாரங்களில், 2022 ஆம் ஆண்டில் இலங்கை 85வது இடத்தில் உள்ளது. தேசிய புத்தாக்க முகவராண்மை (NIA), உலகளவிலான குறியீடுகளில் இலங்கையை முன்னெடுத்து ச்செல்ல கட்டாயப்படுத்தப்பட்ட அரசு நிறுவனமான தேசிய புத்தாக்க முகவராண்மை (NIA) தேசிய அளவில் திறன்மிகு எதிர்காலமையம் (Smart future) மற்றும் WIPO ஆகியவற்றுடன்இணைந்துஅக்டோபர்7, 2022 அன்றுகொழும்பிலுள்ளவுசுயுஊநு வல்லுநர் நிலையத்தில் ஒரு Hybrid நிகழ்வை நடாத்தியது.

கௌரவ கல்வி அமைச்சர் டாக்டர் சுசில் பிரேமஜயந்த சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, உலக புதுமைக் கண்டுபிடிப்புக் குறியீட்டின் WIPO அமைப்பு பிரிவுத் தலைவர் சாச வுன்ச் வின்சன்ட் (Sacha Wunsch- Vincent) மற்றும் பேராசிரியர் சவுமித்ரா தத்தா (Soumitra Dutta) பீடாதிபதி, ஒக்ஸ்போட் வியாபார கல்வி நிலையம் மற்றும் Oxford Said Business School and Founder/Author of the GII, ஆகியோர் உரையாற்றினர்.

NIA, பேராசிரியர் அஜித் டி அல்விஸ், செல்வி.விந்யா விஜேசிங்க, என். ஹெமிந்த ஜெயவீர, இலங்கை தொழில் நுட்பவளாகம் மற்றும் ட்ரேஸ் சிட்டியின் நிர்வாகக் குழு உறுப்பினர் திரு. ரனில் வித்தரண, MAS holding நிறுவனத்தின் புதுமைப் படைப்பு அதிகாரி திரு ரனில் வித்தரன, SMART எதிர்கால மையத்தின் பொருளாதார நிபுணர் மற்றும் இணை நிறுவனர் திரு அனுஷ்க விஜேசிங்க ஆகியோரும் தங்களது கருத்துக்களைத் தெரிவித்தனர். அனுஷ்க விஜேசிங்க நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார்.


Global Innovation Index 2022

SRI LANKA

85th Sri Lanka ranks 85th among the 132 economies featured in the GII 2022.

**The Global Innovation Index (GII) ranks world economies according to their innovation capabilities. Consisting of roughly 80 indicators, grouped into innovation inputs and outputs, the GII aims to capture the multi-dimensional facets of innovation.**

The following table shows the rankings of Sri Lanka over the past three years, noting that data availability and changes to the GII model framework influence year-on-year comparisons of the GII rankings. The statistical confidence interval for the ranking of Sri Lanka in the GII 2022 is between ranks 80 and 87.

Rankings for Sri Lanka (2020–2022)

| GIIYR | GII | Innovation inputs | Innovation outputs |
|---|---|---|---|
| 2020 | 101 | 107 | 83 |
| 2021 | 95 | 103 | 85 |
| 2022 | 85 | 102 | 68 |

- Sri Lanka performs better in innovation outputs than innovation inputs in 2022.
- This year Sri Lanka ranks 102nd in innovation inputs, higher than both 2021 and 2020.
- As for innovation outputs, Sri Lanka ranks 68th. This position is higher than both 2021 and 2020.


*இடது புறத்திலிருந்து* : கலாநிதி சுனில் பிரேமஜயந்த, கலாநிதி சாசா வுன்ச்வின்சன்ட், திரு. ரணில் வித்தாரன மற்றும் பேராசிரியர் சௌமித்ரா டட்டா)

## “One Village; One Brand”

தேசிய புத்தாக்க இயக்கத்தின் கீழ் சமுதாய புத்தாக்க திட்டத்திற்கு ஆதரவாக, ஒரு கிராமம், ஒரு தரம் திட்டத்தை NIA தொடங்கியது. இந்த கருத்துருவில், கிராம / மாவட்ட / மாகாண அளவில் தனித்துவமான தொழில்நுட்பங்களை அடையாளம் காணுதல், தேவையான தொழில்நுட்ப நிபுணர்களுடன் இணைப்புகளை உருவாக்குதல் மற்றும் இலங்கையில் உள்ள ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனங்களின் வர்த்தக வாய்ப்புகளை பகுப்பாய்வு செய்தல் ஆகியவை அடங்கும்.
அறிவு சார் நிபுணத்துவம் மற்றும் தொழில் நுட்ப பரிமாற்றம் மற்றும் தொடர்புடைய வணிக

உத்திகள் மூலம் உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைகளில் தொழில்நுட்ப உதவிவழங்குதல், ஆய்வுசெய்தல் மற்றும் ஊடுருவுதல் ஆகிய வற்றில் நிபுணத்துவம் பெறுவதற்கு இத்திட்டம் உதவும். இந்த திட்டத்திற்கு ஜீ மற்றும் தொழில்நுட்ப பரிமாற்ற துணை நிறுவனமாக ICTA NIA ல் செயற்படும். இதன் மூலம் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தவும், மாகாண மட்டத்தில் உள்ள அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யவும் திட்டமிடப் பட்டுள்ளது. கொரிய தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் (f) அறிவு சார் பரிமாற்றத் திட்டம் மற்றும் ரிம்பர் புதுமை த்திட்டம் COSTI ஆகியவற்றிலிருந்து பெற்ற அறிவு மற்றும் அனுபவத்தை NIA பயன்படுத்திக்கொள்ளும்.






இலங்கையில் உள்ள பித்தளை, மட்பாண்டங்கள், மரத் தளபாடங்கள் மற்றும் கிராமப்புறத் தொழில் மேம்பாடு அமைச்சுடன் (6.4.8 வரவு-செலவுத் திட்ட உரை 2022) பேச்சுவார்த்தையை NIA தொடங்கியுள்ளது.

2022 மகளிர் தின கொண்டாட்டம்




"ஆசிய-பசிபிக˙ வலயத்தில் பெண்களின் சிறந்த புத்தாக்க கண்டுபிடிப்பு" என்ற தலைப்பில் மார்ச் 8, 2022 அன்று நடை பெற்ற சர்வதேச மகளிர் தின கொண்டாட்டங்களுக்கான ஒருங்கிணைப்பை தேசிய புத்தாக்க நிறுவனம் மேற் கொண்டது. உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பினால் (WIPO) ஏற்பாடு செய்திருந்த இந்த மாநாட்டில் மூன்று சிறப்பு பேச்சாளர்கள் இலங்கையின் சார்பில் பங்கேற்றனர். அதில் செல்வி. விந்தியா விஜயசிங்க, NIA வின் பிரதம புத்தாக்க பிரிவு அதிகாரி ஆவார். "தற்காலப் பணியாளர்களில் பாலினப் பாகுபாட்டை நீக்குவது" என்ற தலைப்பில் இந்தக் கூட்டத் தொடரின் குழு உறுப்பினராக இருந்தார்.

இலங்கையின் தற்போதைய புதுமைப் படைப்பு நிலை மற்றும் புதுமைப் படைப்பில் பாலின இடைவெளியை மூடுவதற்கு சிறப்பு கவனம் செலுத்தும் நிலையை மேம்படுத்த தேசிய புலனாய்வு அமைப்பு எவ்வாறு செயல் படும் என்பதை திருமதி விஜயசிங்க எடுத்துரைத்தார். திறன் மேம்பாடு, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கான மாநில செயலாளர்

திருமதி தீபாலீயனகே ‘‘பிராந்தியத்தில் சிறந்த நடை முறைகள் ’’ என்ற முன்முயற்சியின் கீழ் ‘‘உழமையான பெண்கள்’’ என்ற முன் முயற்சி பற்றியும், ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ அறிவியல் பீடத்தின் பேராசிரியர் நீலிகாமாளிகே ஆகியோரின் முயற்சியைப் பற்றியும் பேசினார்.

தேசிய தொழில்நுட்ப பரிமாற்ற அமைப்பை உருவாக்குதல்
WIPO புத்தாக்க சுற்றுச்சூழல் திட்டத்தை செயல்படுத்துதல் - இலங்கை

ஐ. பி. அடிப்படையிலான ஆராய்ச்சி / தொழில்நுட்ப வணிக மயமாக்கலை மேம்படுத்த வளரும் நாடுகளுக்கு உதவும் உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பின் உலகளாவிய முயற்சியாகும். நாட்டில் உள்ள முக்கிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்கள் / பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்ப பரிமாற்ற வல்லுநர்களை உருவாக்கு வதையும், முறையான தொழில் நுட்ப பரிமாற்றத்தை நடைமுறைப் படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டம் 2016 ஆம் ஆண்டில் இலங்கையில் தொடங்கப்பட்டது.

ஜீ அடிப்படையிலான ஆராய்ச்சி / தொழில்நுட்ப வணிக மயமாக்கலை மேம்படுத்துவதற்காக வளரும் நாடுகளுக்கான உலக அறிவு சார் சொத்து அமைப்பின் (WIPO) உலகளாவிய முன்முயற்சியை செயல்படுத்தும் புதுமை சூழல் (EIE) திட்டம் ஆகும். 2016 ஆம் ஆண்டு இலங்கையில் தொழில்நுட்ப பரிமாற்ற நிபுணர்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் மற்றும் நாட்டின் முக்கிய R இல் முறையான தொழில் நுட்ப பரிமாற்ற அமைப்பை நடைமுறைப் படுத்துதல்.

Hub & Spoke மாதிரியைப் பின்பற்றி இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. தேசிய அறிவு சார் சொத்துரிமை அலுவலகம் (NIPO) திட்ட செயலகமாகவும், NIA (முன்னாள் COSTI) மையமாக செயற்பட்டு வருகின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் இந்த திட்டத்தில் பங்குகொண்டன. ஊலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பின் ஒப்புதலுடன், அதிக பல்கலைக் கழகங்களையும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்களையும் திட்டத்துடன் இணைப்பதன் மூலம், TT (தொழில்நுட்ப பரிமாற்ற) அமைப்பை மேம்படுத்துவதை NIA நோக்கமாகக் கொண்டுள்ளது.

## EIE தொலைதூர வழிகாட்டுதல் திட்டம் (2021-2022)

உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பின் (WIPO EIE) கீழ் ஆராய்ச்சி மற்றும் வழிகாட்டுதல் திட்டம், வணிக திறன் தொழில் நுட்பங்களுக்கான சிறப்புவணிக மதிப்பீடு மற்றும் உதவியை வழங்குகிறது. உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பின் (WIPO) தொழில்நுட்ப பரிமாற்ற நிபுணர்களால் 6 மாத காலகாலக் கெடுவுடன் கூடிய வருடாந்திர அடிப்படையில் இணைய வழி தளம் மூலம் இந்ததிட்டம் நடத்தப்படுகிறது. நிறுவனம்/பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பரிமாற்ற அலுவலகத்தின் மூலம் சமர்ப்பிக்கப்படும் தொழில்நுட்பங்கள் பட்டியலிடப்பட்டு முறையான வணிக மயமாக்கல் உத்தியை உருவாக்க வழிகாட்டப்படுகின்றன. தொழில்நுட்ப மற்றும் சந்தை மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல், கண்டுபிடிப்பை வணிக மயமாக்குதல் திறன், தொழில்நுட்ப குறியிடுதல், உரிமம் வழங்கும் உத்தியை உருவாக்குதல் உள்ளிட்டவை இதில் அடங்கும். EIE. அல்லாத நிறுவனங்களுக்கு, NIA. யில் உள்ள தொழில் நுட்ப புதுமை ஆதரவுமையம் (TISC) மூலம் தங்கள் தொழில்நுட்பங்களை சமர்ப்பிக்க வழிவகுக்கப்பட்டது. NIA இன் TISC இன் பதிமாற்று TTO என்ற பெயரில் வேலை செய்கிறது மற்றும் அதன் வணிக மயமாக்கலில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் நுட்பங்களை ஆதரிக்க நியமிக்கப்பட்ட ஆலோசகருடன் ஒத்துழைக்கிறது. மேலும், தொழில் நுட்பபரிமாற்ற அலுவலகத்தை நிறுவுதல், பொருத்தமான கொள்கைகள் மற்றும் நிலையான செயல்பாட்டு வழிமுறைகளை அமல்படுத்துதல் மற்றும் தேவையான மனிதவள திறன்களை மேம்படுத்துதல் ஆகிய வற்றின் மூலம் இந்த நிறுவனத்திற்கு தொழில்நுட்ப வணிக மயமாக்கும் முறையான தொழில் நுட்பவழி முறைகளை என் IV வழிகாட்டுகிறது..

14 பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்களின் தொழில்நுட்பங்கள் தேசியபுத்தாக்க முகவராண்மை ஒருங்கிணைப்புடன் வழிநடத்தப்பட்டன. இந்த நிறுவனங்களின் தொழில்நுட்ப பரிமாற்ற அலுவலகங்கள், உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பின் வழிகாட்டுதல் உதவியுடன், சர்வதேச தொழில் நுட்ப பரிமாற்ற நிபுணர்களின் உதவியுடன், அவற்றின் வணிக மயமாக்கல் செயல்பாடுகளால் பயனடைந்து வருகின்றன.

## EIE IP நிறுவனக் கொள்கை மேம்பாடு

நிறுவன ரீதியான அறிவுசார் சொத்துரிமை கொள்கைகளை மேம்படுத்த அல்லது மேம்படுத்த நிறுவனங்களுக்கு உதவுவதற்காக நிறுவன அறிவுசார் சொத்துரிமை மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டது. உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பின் (WIPO) நியமிக்கப்பட்ட நிபுணர்கள், கொள்கை மேம்பாடுகள் அல்லது திருத்தங்களுக்கு ஆதரவாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களுடன் பணியாற்றி வருகின்றனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கோத்தலவாலா பாதுகாப்பு பல்கலைக்கழகம் (KDU), இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை தேசிய நிறுவனம் ஆகியவை இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கின்றன. IP கொள்கை மேம்பாட்டு செயல்முறையில் உள்ள நிறுவனங்களை ஒருங்கிணைக்கவும் ஆதரிக்கவும் NIA , TISC. உள்ளது.

தொழில் நுட்ப பரிமாற்றம் தொடர்பான வருடாந்த கணக்கெடுப்பு

இலங்கையின் ஆராய்ச்சி வணிகமயமாக்கல் முறையின் உரிய கண்காணிப்பு வழிமுறைகளை அமல்படுத்துவதற்காக தொழில்நுட்ப பரிமாற்றம் குறித்த ஆண்டு ஆய்வு நடத்தப்பட்டது. சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட கணக்கெடுப்புகளின் அடிப்படையில், பல்கலைக்கழக தொழில்நுட்ப மேலாளர்கள் சங்கத்தின் (AUTM) வருடாந்திர உரிமம் தொடர்பான கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த ஆய்வறிக்கையை கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியக் குழு (UGC) அங்கீகரித்துள்ளது. பல்கலைக்கழகங்களின் தொழில்நுட்ப பரிமாற்ற அலுவலகங்களின் இலங்கை சங்கத்துடன் (LATTO) இணைந்து தேசிய புத்தாக்க முகவராண்மை (NIA) இந்த ஆய்வை நடத்தியது. ஆண்டு தோறும் கணக்கெடுப்பை மேற்கொள்ள இணைய தள அடிப்படையிலான தளம் உருவாக்கப்படுகிறது. ஆராய்ச்சி வணிகமயமாக்கல் நடவடிக்கைகளின் புள்ளி விவர தரவு சேகரிக்கப்படும், இதில் ஆராய்ச்சி செலவு, அறிவுசார்சொத்து, தொழில்நுட்பஉரிமம், தொடக்கஒருங்கிணைப்பு, தயாரிப்புவணிகமயமாக்கல், முதலியனஅடங்கும். சேகரிக்கப்பட்ட தரவு தொழில்நுட்ப பரிமாற்ற நடவடிக்கைகளின் மதிப்பைத் தெரிவிக்கவும் மற்றும் அளவிடவும் பயன்படுத்தப்படும். தேசிய பொருளாதாரத்தில் தொழில்நுட்ப பரிமாற்றதாக்கம்.

## வணிகமயமாக்கல் மற்றும் வழிகாட்டுதல்

அறுவடைக்குப் பிந்திய மேலாண்மைக்கான தேசிய நிறுவனம் உருவாக்கிய தொழில்நுட்பங்கள் குறித்து இனிப்பு பண்டங்கள் உற்பத்தியாளரகள் மற்றும் ஐஸ்கிரீம் உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. இந்த தொழில் நுட்பங்கள் WIPO EIE திட்டத்தின் கீழ் WIPO வணிகமயமாக்கல் நிபுணர்களால் வழிகாட்டப்பட்டது. NIA NIPHM இன் roxy TTO ஆக பணிபுரிந்தது மற்றும் NIPHM அதன் சொந்த TTO ஐ உருவாக்க ஆதரவளித்து வந்தது.





பேரா தொழில்நுட்ப குழப்பம் - 2022 (PERA TECH-DISRUPT 2K22)

பேராதனை பல்கலைக்கழகத்தின் வணிக இணைப்பு புதுமையாக்க ம்மற்றும் தொழில்நுட்ப பரிமாற்ற அலுவலகம் (BLII- TTO)

சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் இணைந்து தேசிய அளவிலான புதுமைச் சவால் ஒன்றை நடத்தியது.

பல்கலைக் கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் வணிக சமூகங்களைச் சேர்ந்த கண்டு பிடிப்பாளர்கள் இடையே தொழில் நுட்பபரி மாற்றம் மற்றும் தொழில் முயற்சியின் கலாச்சாரத்தை ஊக்குவிப்பதே இந்த முயற்சியின் முக்கிய நோக்கமாகும். இந்த முன்னேற்பாடானது ஒரு கூட்டு நிகழ்வாக (இணைய வழி மூலமான மற்றும் நேர்காணல் கூட்டங்கள்) புத்தாக்கங்களை இணைக்கவும், கற்றுக்கொள்ளவும், மேம்படுத்தவும், தொழில்நுட்பபரி மாற்றம் மற்றும் துவக்கங்கள் தொடர்பான பட்டறைகள், இறுதி நிகழ்வு மற்றும் விருது வழங்கும் விழா ஆகியவற்றுடன் ஊடாடும்வாய்ப்புகளுடன் நடத்தப்பட்டது.

தேசிய புத்தாக்க முகவராண்மை இந்த நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் பங்குதாரராக இணைந்து புத்தாக்க கண்டுபிடிப்பு மதிப்பீட்டு அளவு கோல்களை உருவாக்க ஆதரவு தெரிவித்ததுடன் சம்பந்தப்பட்ட அறிவுசார் சொத்துரிமை மேலாண்மை மற்றும் தொழில்நுட்ப பரிமாற்ற நடைமுறைகளில் விண்ணப்பதாரர்களுக் குவழிகாட்டியது. இந்த நிகழ்ச்சி ஜூன் 29ம் தேதி தொடங்கப்பட்டது.

**ASPAC: பெண் கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தொழில் முனைவோர் திட்டம்:**
கைகோர்த்து செயல் படுவதிலிருந்து வலுவடைதல் அறிவுசார் சொத்துரிமை என்ற கண்ணோட்டத்தில் புத்தாக்க தொழில்முனைவுப் பயணத்தின் பங்கேற்பாளர்களை இந்த திட்டம் பல்வேறு கட்டங்களில் கருத்தியல் முதல், வளர்ச்சி மற்றும், புதுமையான யோசனைகளின் வளர்ச்சி – எளிதான நடைமுறைத் தகவல்கள் மூலம் பங்கேற்பாளர்களை வழிநடத்திச் செல்லும்.

முதல்கட்டமாக, ஜூன் 1 2022 முதல் ஆகஸ்ட் 3, 2022 வரை, ஒவ்வொரு புதன்கிழமையும், மெய்நிகர் கூட்டமும், வழிகாட்டுதல், போட்டிகளை உருவாக்கும் நடவடிக்கைகள், வலையமைப் மற்றும் திறன்சார் நிபுணர்களுடன் பயிற்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய அறிவுசார் நிகழ்வுகளை பகிரும் அமைப்பாக செயல்படும்.

இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் முப்பது (30) பெண் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் புத்தாக்க கண்டுபிடிப்பாளர்களும் இத் திட்டத்தில் இணைந்துள்ளனர்.

## அறிவுசார் சொத்து மதிப்பு (IP in to Rupees)

தேசிய புத்தாக்க முகவராண்மையின் முதல் I.S.B.N வெளியீடு, IP in to Rupees,
ஜூன் 2022ம் ஆண்டு பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான திட்டம்
தொடங்கப்பட்டது.

நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தவும், ‘‘இலங்கை வடிவமைப்பு’’ என்ற கருத்துருவை அறிமுகப் படுத்துவதன் மூலம் அறிவுசார் சொத்துரிமைகளின் திறனை வெளிக் கொணரவும், நாட்டின் படைப்பாற்றல் மற்றும் கண்டுபிடிப்பை மதிப்புக்கூட்டவும் இந்த அறிக்கை வகை செய்கிறது. மேலும், அபிவிருத்தியடைந்த நாடுகள் தமது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு எவ்வாறு IP சொத்துக்களை பயன்படுத்துகின்றன, என்பது பற்றிய நுண்ணறிவை இலங்கை உலகளாவிய நற்பெயருடன் உருவாக்கியுள்ளது.




எவ்வாறாயினும், அவர்களில் பெரும்பாலானோர் இலங்கை பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான ஜீ சொத்தாக அங்கீகரிக்கப்பட வில்லை. அதன் திறனைக் கண்டறிந்து பொருளாதாரத்தை ஆதரிப்பதற்காக, தீவிர தொழில்களை மேம்படுத்துவதில் அரசாங்கம் முக்கியபங்கு கண்டுபிடிப்பு செயல் முறையின் தொட்டுணரமுடியாத சொத்துக்களுடன் பொருளாதாரத்தை மேம்படுத்த தேசிய புத்தாக்க முகவராண்மை (NIA) ஒருசாத்தியமான IP சொத்து வரைபடம் மற்றும் புத்தாக்க முறைகனை கண்டறிந்து உருவாக்கியுள்ளது. வரைபடம் மற்றும் திறன் கூறுகளை திறம்பட இயக்குவதும் ஜீ சொத்துக்களை அறுவடை செய்வதற்கும் நடுத்தர வருமான பொறியிலிருந்து தப்பிப்பதற்கும் துணைபுரியும்.

முக்கியமாக, “SRI LANKAN DESIGN” என்ற கருத்தை உலகிற்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் இலங்கையின் தொட்டுணரமுடியாத சொத்துக்களை ரூபாயில் கைப்பற்றும் கருத்தை இவ்வறிக்கை காட்சிப்படுத்துகிறது.

**இலங்கை மத்திய வங்கியின் ஆளுனருடனான சந்திப்பு**

பெரும்பாலான வளர்ந்த நாடுகளில் தொட்டுணர முடியாத சொத்துகளில் முதலீடு அதிகரித்து வருகிறது. அதன்படி, உலகளாவிய பொருளாதார சூழ்நிலையில் முக்கிய பங்குதாரர்கள் கொள்கை மாற்றங்களில் புதிய கவனம் செலுத்தியுள்ளனர் மற்றும் பொருளாதாரத்திற்கான புதிய ஆதாரமான வளர்ச்சிக்கான ஆதாரமாக தொட்டுணர முடியாத சொத்துக்களை குவிப்பதற்கு உதவுகிறார்கள். இது மாவட்டத்தின் தொட்டுணர முடியாத சொத்துக்களில் முதலீட்டுக்கான நிதியுதவியைப் பொறுத்தது. மேலும், இது அதிக மதிப்புகூட்டப்பட்ட நடவடிக்கைகளில் வெற்றிபெறுவதற்கு தேவையான தொட்டுணர முடியாத சொத்துக்களை உருவாக்க கொள்கை வகுப்பாளர்கள் விரும்பும் பொருளாதாரங்களில் கவனம் செலுத்தும்.

இந்த பின்னணியில் NIA குழு, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவிடம் "IP in Ruppee" என்ற தொட்டுணர முடியாத சொத்துகள் பற்றிய அறிக்கையை கையளித்தது மற்றும் புதுமையான உந்துதல் பொருளாதாரத்திற்கான பொருளாதார குறிகாட்டியாக அருவ சொத்துக்களை கருதுவதற்கான ஆரம்ப கலந்துரையாடல் நடைபெற்றது. இலங்கையில் புத்தாக்க சுற்றுச்சூழலை செழிக்கபயன் படுத்தக்கூடிய உலகளாவிய கண்டுபிடிப்பு சுட்டெண் குறித்தும் குழு அவரது கவனத்தை ஈர்த்தது.



(இடமிருந்து வலம் : பேராசிரியர் அஜித் டீ அல்விஸ், கலாநிதி. நந்தலால் வீரசிங்க, செல்வி திடசி தகநாயக்க, செல்வி விந்தியா விஜேசிங்க மற்றும் செல்வி நவோதி விக்கிரமசிங்க)

## NIA IP தின கொண்டாட்டங்கள்

உலக IP தின கொண்டாட்டத்திற்கு இணையாக, 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் தேதி தேசிய புத்தாக நிறுவனம் ஒரு இணைய வழி கலந்தரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்தது" IP மற்றும் இளைஞர்களின் சிறந்த எதிர்காலத்திற்காக புதுமையாளர்களாக இலங்கை இளைஞர்கள் நீங்கள் தயாரா?". தேசிய அறிவுசார் சொத்து அலுவலகம் (NIPO), மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் நிறுவன / பல்கலைக்கழக வணிக இணைப்புப் பிரிவு மற்றும் உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பின் (NIPO) ஆசியா மற்றும் பசிபிக் பிரிவு இந்த நிகழ்விற்காக NIA உடன் கூட்டு சேர்ந்தது. பேராசிரியர் அஜித் டி அல்விஸ் பிரதம புத்தாக்க அதிகாரி தேசிய புத்தாக்க முகவர், ஆசியா மற்றும் பசுபிக் பிரிவின் பணிப்பாளர் திரு அன்ட்ரூ மைக்கேல் ஓங், உலக அறிவுசார் சொத்துரிமை (NIPO) அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கீதாஞ்சலி ரணவக்க, தேசிய அறிவுசார் சொத்து அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம், கலாநிதி அஜித் பஸ்குவல், பல்கலைக் கழகத்தின் பணிப்பாளர். மற்றும் தொழில் முனைவோர், துருவின் இணை நிறுவனர் மற்றும் உஷானி ஹேவகே, சிரேஸ்ட நிர்வாகி - டிசைன் மற்றும் இனோவேஷன், ஹேலிஸ் / பேப்ரிக் பி எல் சி ஆகியோர் சிறந்த குழு உறுப்பினர்களாக இருந்தனர்.






## இந்தியா ஆந்திரா பல்கலைக்கழக IP தின நிகழ்வு:

ஏப்ரல் 26, 2022 அன்று இந்தியாவின் ஆந்திரா பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்த உலக அறிவுசார் சொத்து தின கொண்டாட்ட நிகழ்வில் தேசிய புத்தாக்க நிறுவன இணை அமைப்பாளராக இருந்தது. இந்த நிகழ்வில் NIA இன் தலைமை புத்தாக்க அதிகாரி பேராசிரியர் அஜித் டி அல்விஸ் சிறப்புரையாற்றினார்.







தேசிய புத்தாக்க சுற்றுச்சூழல் பிண்ணனி (National innovation eco system) அமைப்பை வலுப்படுத்துவதற்கான தொடர்புடைய கொள்கைகள் மற்றும் உத்திகளை உருவாக்குதல்

## NIA தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து வெளியேறுவதற்கு உதவுவதற்கான தொடர் கலந்துரையாடல்கள்

2022 ஆம் ஆண்டில் இலங்கை அதன் மோசமான பொருளாதார நெருக்கடிகளில் ஒன்றை எதிர்கொண்டது, ஆற்றல், போக்குவரத்து, எரிபொருள், உணவு பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான பல பிரச்சினைகளுக்கு வழிவகுத்தது. கண்டு பிடிப்புகள் மூலம் நிலைமையை சமாளிக்கும் ஒரு முயற்சியாக, தேசிய புத்தாக்க நிறுவனம் இந்த முக்கிய பிரச்சனைகள் ஒவ்வொன்றிலும் தொடர்ச்சியான கூட்டங்களை நடத்த முடிவுசெய்தது, நிபுணர்கள், ஆர்வலர்கள் பங்குதாரர்கள் மற்றும் பிற ஆர்வமுள்ள தரப்பினரை தங்கள் கருத்துக்களையும் யோசனைகளையும் பகிர்ந்துகொள்ள அழைக்கிறது.
அதன்படி, பல ஆர்வமுள்ளப ணியாளர்களின் தீவிர பங்கேற்புடன், உயிர்வாயு பற்றிய ஒரு வெற்றிகரமான கருத்துக்களும் நடைபெற்றது.

## NIA – உயிர் வாயு ஒன்றுகூடல்

இது NIA குழு சுயுவின் தொடரின் முதல் அத்தியாயமாகும். தற்போதைய பொருளாதார மற்றும் எரிசக்தி நெருக்கடிகளால் குடிமக்கள் IP எரி வாயுக்கான மாற்று வழிகளைத் தேடுகின்றனர். உயிர் வாயு மக்களிடம் பெரும் ஆர்வத்தைப் பெற்றுள்ளது. பரவலான எரிவாயு பிரச்சினைக்கு நிலையான பொருளாதார தீர்வை வழங்க உயிர்வாயு மன்றம் கூட்டப்பட்டது. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, ஒழுங்கு முறை ஆணைக்குழுக்கள், தொழிற்சாலைகள் மற்றும் உற்பத்தியாளர்கள், வங்கி மற்றும் நிதி, கட்டிடக் கலைஞர்கள் மற்றும் வடிவமைப்பாளர்கள், கண்டு பிடிப்பாளர்கள் ஆகியோரிடமிருந்து அடையாளம் காணப்பட்ட முக்கிய பங்குதாரர்கள் இந்த நிகழ்வுக்கு இணையவழி மூலம் கலந்துகொண்டனர். உயிரி எரி வாயு உற்பத்தியாளர்கள் நாட்டின் அந் நிய செலாவணி வரைபு காரணமாக உருவாக்கப்பட்ட தற்போதைய நிலைமை மற்றும் பிரச்சினைகள் குறித்து பேசினர். பல்வேறு தொழில்நுட்ப பிரச்சினைகள் மற்றும் தர நிலை மற்றும் ஒழுங்குமுறை பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. வங்கித்துறை தனது முன்னேற்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான சம்மதத்தை வெளிப்படுத்தியுள்ளது. இரு பத்தைந்து செயலூக்கமுள்ள இடங்கள் அடையாளம் காணப்பட்டு, அவற்றை புத்தாக்க

முறையில் எதிர்கொள்ள NIA ஆவலுடன் உள்ளது. இதன்விளைவாக, இரசாயன கொள்கலன்களை விடுவிப்பதற்காக முறையான அனுமதிகளைப் பெறுவதற்கு CEA Tld;NIA பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாகத் தொடங்கியது. தற்போது அது செயல்படுத்தப்படும் இறுதி கட்டத்தில் உள்ளது.

இதற்கிடையில், நீண்டகால எரிசக்தி உற்பத்திக்கான இந்த தொழில்நுட்பத்தின் திறனை DFCC வங்கி புரிந்து கொண்டதுடன், இயற்கை உரத்தின் சிறந்த ஆதாரமாகவும், நாட்டின் உயிரி எரிவாயு பயன்பாட்டை மேம்படுத்தவும் NIA வுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த முன்னோடித் திட்டம் தம்புத்தேகமை மற்றும் நாதந்தியா பகுதிகளில் உள்ள விவசாய சமூகத்தினரை கூடுதலான இலக்காகக் கொண்டும், முதல் முறையாக நகர்ப்புறங்களில் வசிப்பவர்கள், பூஜ்ய வட்டித் தொகைத் திட்டத்துடன் கூடிய BIOGAS அலகுகளை கடன் அட்டை மூலம்வாங்குவதைப் ஊக்கப் பயன்படுத்திக் கொள்ளலாம்.






DFCC Bank-NIA partner to support biogas technology adoption

DFCC Bank, Sri Lanka's pioneer in financing renewable energy, has joined hands with the recently established National Innovation Agency (NIA), which was enacted by the parliamentary Act No. 22 of 2019, to promote biogas technology, as the agency's financial services provider and to create broader awareness about this sustainable alternative.

From left: DFCC Bank PLC Assistant Vice President Marketing and Sustainability Senaka Jayasinghe, DFCC Bank PLC Assistant Vice President MSME Chandana Wanigasena, DFCC Bank PLC Senior Vice President Offshore Banking, Remittances and Business Development Anton Arumugam, NIA Chief Innovation Officer Prof. Ajith de Alwis, NIA Innovation Officer Dr. Sachie Panawala and NIA Innovation Officer Navodi Wickramasinghe

Discussing the benefits and strengths of the technology, NIA Chief Innovation Officer Prof. Ajith de Alwis said, "Biogas has a triple benefit as waste becomes raw material, hence accomplishing recycling and sustainable disposal, while the output derived from that waste is transformed into a sustainable energy source and can also be used as an organic fertiliser. Therefore, this process stands unique as the only process that does not generate waste but instead uses waste as the input." "At the larger community and social level, it can help reduce energy costs and our carbon footprint while providing an effective and efficient method of waste disposal, often onsite or in the nearby vicinity. We hope to see this technology promoted further and popularised, which is why we have partnered with DFCC Bank," he added.

(இடமிருந்து வலம் : (DFCC உத்தியோகத்தர்கள்) திரு. சேனக ஜயசிங்க, பிரதி உதவி தவிசாளர் – நிலைத்திருக்கும் தன்மை, திரு. சந்தன வணிகசிங்க – பிரதி உதவி தவிசாளர் – சிறய மற்றும் நடுத்தர வியாபாரம் மற்றும் திரு அன்டன் ஆறுமுகம் - சிரேஸ்ட பிரதி தவிசாளர் – வெளிநாட்டு வங்கிச்சேவை, முதலீடு மற்றும் வியாபார விருத்தி, (NIA உத்தியோகத்தர்கள்) பேராசிரியர் அஜித் டீ அல்விஸ், வைத்தியர் சசீ பனாவள – மேலதிக பிரதான புத்தாக்க உத்தியோகத்தர் செல்வி நவோதி விக்கிரமசிங்க – சிரேஸ்ட புத்தாக்க உத்தியோகத்தர்)

## NIA - உயிர்வாயு மன்றங்கள்

NIA - **உயிர்வாயு** குறித்து கிட்டத்தட்ட இதே போன்ற ஒருவிவாதத்தையும் பல பங்குதாரர்களின் பங்கேற்புடன் நடத்தியது. இதன்விளைவாக, இலங்கை தர நிர்ணய நிறுவனம் (SLSI) கணினியில் அடையாளம் காணப்பட்ட பயோடீசலுக்கான தர நிலைகளை வகுக்கு மாறுகோரப்பட்டது.

## NIA – உணவுப் பாதுகாப்பு மன்றங்கள்

இது தொடர்பாக பங்குதாரர்கள், கொள்கை உருவாக்குவோர் மற்றும் நிபுணர்களின் பங்கேற்புடன் தேசிய உணவு பாதுகாப்பு இணையவழி மாநாடு நடை பெற்றது.



## உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுதல் தேசிய புத்தாக்க முகவராண்மை மற்றும் திறன்மிகு எதிர்காலத்திற்கான மையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

தேசிய புத்தாக்க முகவராண்மை (NIA) மற்றும் புத்திசாலித் தனமான எதிர்காலத்திற்கான மையம் (CSF) இடையே தேசிய கண்டுபிடிப்பு சுற்றுச்சூழல் அமைப்பை (NIES) மேம்படுத்தவும் வலுப்படுத்தவும் ஒத்துழைக்க ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.




பேராசிரியர் அஜித் டீ அல்விஸ் மற்றும் திரு. அனுஷ்க விஜேசிங்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கையெழுத்திடும் போது

புத்திசாலித்தனமான எதிர்காலத்திற்கான மையம் (CSF) என்பது கொழும்பை தலைமையிடமாகக் கொண்ட ஒரு இணையவழி சிந்தனைக் குழுவாகும், இதுபொருளாதார வளர்ச்சி மற்றும் போட்டித்திறன், அறிவியல்மற்றும் தொழில் நுட்பம், சுற்றுச்சூழல் நிலைத் தன்மை, நகரமயமாக்கல் மற்றும் நகரங்கள் மற்றும் சர்வதேச வர்த்தகம் ஆகிய ஐந்து முக்கிய கருப்பொருள் பகுதிகளில் முதன்மையாக கவனம் செலுத்துகிறது.

இந்த ஒத்துழைப்பின் மூலம், புத்தாக்க ம்மற்றும் தொழில் முனைவோர் மூலோபாயத்தை செயல்படுத்துவது மற்றும் உலகளாவிய குறியீடுகளில், குறிப்பாக உலகளாவிய புத்தாக்க சுட்டெண்களில் (GII) இலங்கையை நிலை நிறுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை வலுப்படுத்த தேசிய புத்தாக்க முகவராண்மை திட்டமிட்டுள்ளது. (GII).

ஸ்மார்ட் / பியூச்சர் மையத்தின் (CSF) இணை நிறுவனர் திருஅனுஷ்கா விஜேசின்ஹா மற்றும் NIA இன் தலைமை கண்டுபிடிப்பு அதிகாரி பேராசிரியர் அஜித் டி அல்விஸ் ஆகியோர் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தங்கள் அமைப்புகளின் சார்பாக கையெழுத்திட்டனர்.

## பெண் தொழில் முனை வோரை மேம்படுத்த NIA உடனான ஒருங்கிணைப்பு

பெண் தொழில் முனைவோரை வலுவூட்டுவதற்காக SMEConect ஒரு இலத்திரனவியல் தளத்தை (www.smeconnect.lk) மேம்படுத்துவதற்காக தேசிய புத்தாக்க முகவராண்மை இலங்கையின் தேசிய நிறுவன மேம்பாட்டு ஆணையத்துடன் (NEDA) கைகோர்த்துள்ளது
SME connect ஆனது ஆசிய வளர்ச்சி வங்கியால் (ADB) அதன் "சிறு மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனக்கடன்" திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது. பெண் தொழில் முனைவோருக்கு அவர்களின் நிதி மற்றும் வணிக நடைமுறைகள் பற்றிய அறிவை மேம்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காக கருவூலத்தின் செயலாளரின் உத்தரவுகளின்படி, தொழில் துறை அமைச்சரவையின் அனுசரணையுடன் NEDA க்கு நோக்கம்

ஒதுக்கப்பட்டது. புதுமையான தயாரிப்புகள் போன்றவைகளுக்கான தளம், அனைத்து தொழில் முனைவோருக்கும் திறந்திருக்கும் ஆனால் பெண் தொழில்முனைவோர் மீது சிறப்பு கவனம் செலுத்தி, கற்றல் இவழிகாட்டுதல் மற்றும் இணைப்பாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆதரவை வழங்குகிறது.

NIA அதன் சமூக கண்டுபிடிப்பு தளம் மற்றும் WIPO உடன் தொடங்கப்படும் பெண்கள் கண்டுபிடிப்பு மற்றும் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் இந்ததளத்துடன் ஒத்துழைக்க விரும்புகிறது.

## NIA, Citra உடனான ஒருங்கிணைவு

NIA மற்றும் Citra சமூக புத்தாக்க ஆய்வகம் ஆகியவை NIA-வின் சமூகபுத்தாக்க நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில் வடிவமைப்பு சிந்தனைக் கூட்டத்தை நடத்தின..

